**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண். 101 /2012</u>**

PW 4– திருமதி.தவமணி நாள். 20.02.2026.

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போதுஇராமநாதபுரம் மாவட்டஆட்சியர் அலுவலகத்தில் பதிவு எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையை பெற்று சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க ஆஜராகியுள்ளேன். அழைப்பாணையில் கோரியுள்ள சர்வேஎண்.159/5ன் ,SLR, அ பதிவேடு, FMB, அடங்கல் ஆகியவற்றை கொண்டு வந்துள்ளேன். அவை முறையே Ex.X 2, Ex.X 3, Ex.X 4, Ex.X 5 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. Ex.X 2 ஆவணத்தில் சர்வேஎண் 159/5 கோவிந்ததேவர் பெயரில் இருந்து உடையதேவர் மக்கள் கோவிந்ததேவர், ஆறுமுக தேவர் ஆகியோர் பெயரில் தாக்கல் ஆகியுள்ளது. Ex.X 3 ஆவணத்தில் சர்வேஎண்.159/5 கோவிந்ததேவர், ஆறுமுக தேவர் ஆகியோர் பெயரில் தாக்கல் ஆகியுள்ளது. Ex.X 5 ஆவணத்தில் சர்வே எண் 159/5 சர்வே எண்கள் 159/5A, 159/5 B என உட்பிரிவு ஆகியுள்ளது. சர்வே எண்.159/5A, பாதை புறம்போக்கு என்றும் சர்வே எண் 159/5 B கோவிந்ததேவர், ஆறுமுக தேவர் ஆகியோர் பெயரிலும் தாக்கல் ஆகியுள்ளது.

2.சர்வே எண்.159/5 1968 ஆண்டு உட்பிரிவு ஆகியுள்ளது. 1968 ஆண்டு வரை சர்வே எண் .159/5 ல் பாதை உட்பிரிவு கிடையாது என்றால் சரிதான். சர்வே எண்.159/5ல் மொத்த விஸ்திரனம் 1 ஏக்கர் 29 சென்ட்கள் ஆகும். சர்வே எண்.159/5ல் பாதை 6 சென்ட் ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. Ex.X 4 மேற்படி உட்பிரிவு மேற்கொண்ட பின் தயார்செய்யப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. பொதுவாக

சர்வேக்களின் குறியீடு புலப்பட புத்தகத்தில் இருக்கும் ஆனால் Ex.X 4ல் எங்கெல்லாம் சர்வே ஆகியுள்ளது என்று எனக்கு தெரியவில்லை.

**குறுக்கு விசாரணை**

1. 1968 ஆண்டு சர்வே எண்.159/5 உட்பிரிவு ஆகியுள்ளது என்றாலும் அரசாங்கம் ஒரு தனி நபருக்கு பாத்தியப்பட்ட சொத்தை எடுத்துகொள்ளும் போது அதறற்கான இழப்பீட்டு தொகையை அரசாங்கம் கொடுத்திருக்கும் என்றால் ச ரிதான். சர்வே எண்.159/5 A பாதை புறம்போக்கு என்று பதிவேடுகளில் இருப்பதால்அதனை தனி நபர்கள் வேலிவைத்து தடைசெய்தால் அது நில அபகரிப்பு ஆகும் என்றால் சரிதான். அரசாங்கம் ஒரு நிலத்தை கையகப்படுத்தியுள்ள நிலையில் அந்தநிலத்தை மீண்டும் முன்பாத்தியப்பட்ட நபர் உரிமை கொள்ளமுடியாது என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது.

(ஒம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை